Joint Parliamentary Committee on Scheduled Casts and Tribes.

*4 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state whether the State Government has tendered any opinion to the Joint-Parliamentary Committee on Scheduled Castes and Scheduled Tribes which visited Madras about 16th September 1968?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இல்லை.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: தலைவர் அவர்களே, பார்லிமெண்டரிக் குழு முன்னால் மாநில அரசாங்கம் அளித்த அபிப்பிராயத்தைச் சட்டசபையின் மேஜையின் மேல்வைக்க முன்வருவார்களா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: பார்லிமெண்டரிக் குழுவிடம் இந்த அரசாங்கம் எந்தவிதச் சிபாரிசும் செய்யவில்லை. ஏற்கனவே மத்திய அரசாங்கம் கேட்டதற்கு இணங்கச் சில சிபாரிசுகள் செய்யப்பட்டிருக்கின்றன. பார்லிமெண்டரிக் குழுவிடம் இந்த அரசாங்கம் எந்தக் கருத்தும் கூறவில்லை.

THIRU T. MARTIN: Mr. Speaker, Sir, Backward Communities in this State enjoy certain educational concessions and reservation in admission to Government colleges like Medical Colleges. But unfortunately these concessions and reservations are being denied to Christian converts from the Backward Communities. May I request the Hon. Minister to state whether at least from the coming year the Government will take steps to abolish such discrimination which is being practised only on the ground of religion?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இதைப் பற்றிப் பலமுறை இந்த மன்றத்தில் அரசாங்கத்தின் சார்பில் பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த அரிசன மக்கள் மதம் மாறிய பிறகு, கிறிஸ்தவர்கள் ஆகிவிட்ட பிறகு தீண்டாமையினால் அனுஷ்டிக்கப்படுகிற கொடுமைகள் அவர்களுக்கு இல்லை என்ற காரணத்தால் அவர்களுக்கு ரிசர்வேஷன் இல்லை என்று மத்திய அரசாங்கச் சட்டம் இருக்கிறது. மதம் மாறியவர்களுக்கு இந்த ரிசர்வேஷன் தவிர பொருளாதார ரீதியில் உபகாரச் சம்பளங்கள், மற்றச் சலுகைகள் ஆகியவற்றை நம்முடைய மாநில அரசாங்கம் தொடர்ந்து கொடுத்து வருகிறது.

திரு. என். வரதராஜன்: ஜாதிச் சான்றுகள் பெறுகிறபோது, பள்ளர், பறையர், சக்கிலியர் என்று போடவேண்டுமென்ற நிலை இருப்பதால் அந்த மக்கள் மனம் புண்படுகிறது. ஆகவே, அவர்கள் எல்லாம் ஆதித் திராவிடர் என்று குறிப்பிட்டாலே போதும் என்று அரசு முடிவு எடுக்குமா?

1969 ஆகஸ்ட் 16]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இதைப் பற்றி இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு ஏற்கனவே ஒரு சிபார்சை செய்திருக்கிறது. அந்த சிபார்சில் சண்டாளர்கள் (மதுரை மாவட்டம்), பஞ்சம சமூகம், பறையர், சாம்பவர் போனற சொற்கள் இழிவாகக் கருதப்படுவதால் இவர்களை "ஆதித் திராவிடர்" என்ற "சப்-காஸ்ட்"-டின்கீழ் கொண்டுவரவேண்டு மென்று கூறியிருக்கிறோம். அந்த வகையில் "பறையர்கள்" என்பவர்கள் "ஆதித் திராவிடர்கள்" என்ற "சப்-காஸ்ட்"-டின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. மற்றவர்களையும் அதே போன்று சேர்த்துக்கொள்வது மக்கள் தொகைக் கணக்கு எடுத்து முடிக்கப்பட்டபிறகு அதாவது அடுத்த ஆண்டு முடிவு செய்யப் படும். ஆகவே, இதைப்பற்றி இந்த அரசாங்கம் ஏற்கனவே மத்திய அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்திருக்கிறது.

திரு. என். ராஜாங்கம் : இந்து மதத்திலிருந்து மதம் மாறிய தாழ்த்தப்பட்டவர்கள் மறுபடியும் இந்து மதத்திற்கே வந்து விட்டால் அவர்களுக்கு ரிசர்வேஷன் உண்டா? அப்படியானால் அவர்கள் மறுபடியும் இந்து மதத்திற்கு மாறி எத்தனை ஆண்டுகள் கழித்து ரிசர்வேஷனுக்கான தகுதியைப் பெற முடியும்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்து அரிசனங்களாக இருப்பவர்கள் வேறு மதம் மாறி மீண்டும் இந்துக் களாக வந்தால் நிச்சயமாக இந்து அரிசனங்களுக்கு உள்ள எல்லாச் சலுகைகளும் கிடைக்கும். மாநில அரசாங்கத்தைப் பொறுத்தவரை மதம் மாறிய கிறிஸ்தவ அரிசனங்களுக்கும் ஒரு தலைமுறைக்கு எல்லாச் சலுகைகளும் கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : இன்றைக்கு இந்துவாக இருப்பவன் மறுநாள் கிறிஸ்தவ மதத்திற்கு மாறிவிட்ட காரணத்தால், மத மாற்றம் ஏற்படுகிறதேதவிர, பொருளாதார நிலையில் மாற்றம் எதுவும் ஏற்படுவதில்லை. நம்முடைய இந்தியாவை செக்குலர் ஸ்டேட்—மதச் சார்பற்ற நாடு—என்று சொல்லும் நிலையில், மதம் மாறிய அரிஜனங்களுக்குச் சலுகை கிடைக்கும் வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்தும்வகையில் இந்திய சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நம்முடைய அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நான் முன்னரே சொன்னபடி கிறிஸ்தவ மதத்தில் இன்றைக்கு ஜாதி வித்தியாசம் கிடையாது. கிறிஸ்தவர்கள் ஆகிவிட்டால் அந்த மதத்தின்படி ஜாதி வித்தியாசம் கிடையாது. ஆனால் நடை முறையில் அப்படி இல்லை ; ஜாதி ஏற்றத் தாழ்வுகள் இருக்கத்தான் செய்கின்றன. அந்த முறையில் கிறிஸ்தவ அரிசனங்களுக்கும் எல்லாச் சலுகைகளையும் கொடுக்க வேண்டுமென்ற முறையில் கிறிஸ்தவ அரிசன சங்கங்கள் மனுக்களைக் கொடுத்து வருகிறார்கள். மாநாடுகளைக் கூட்டி தீர்மானங்களை நிறைவேற்றி அனுப்புகிறார்கள்.

வழக்கு மன்றத்திலேகூட வழக்குகள் நடைபெற்று வருகின்றன. அரசாங்கம் அதைக்குறித்து இதுவரை எந்தவித முடிவும் எடுக்கவில்லை.

Milo supplied in Sathuvachari area

*5. Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state whether the milo supplied to family card holders in November 1968, in the Sathuvachari area, Vellore has been found, mixed with plastic beads of grain size?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பங்கீட்டு அட்டை வைத்துள்ளவர்களுக்கு விற்பனை செய்வதற்காக நியாயவிலைக் கடை வணிகர், திரு. சிதம்பரம் 29—10—1968 காலை மைலோ மூட்டை ஒன்றைப் பிரித்தார். அதில் தானிய அளவுள்ள பிளாஸ்டிக் மணிகள் இருப்பதைக் கண்டார். 30—10—1968 அன்று மறுபடியும் இன்னுமொரு மைலோ மூட்டையைப் பிரித்தபொழுது, அதிலும் பிளாஸ்டிக் மணிகளைக் கண்டார். மீதியுள்ள மூட்டைகளும் உடனடியாகச் சோதனை செய்யப்பட்டன. ஆனால், பிளாஸ்டிக் மணிகள் எவையும் அவற்றில் காணப்படவில்லை. மற்றக் கடைகளில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த மைலோ மூட்டைகளிலும் பிளாஸ்டிக் மணிகள் இருக்கின்றனவா என்று பார்ப்பதற்காக அவையும் உடனே பரிசோதிக்கப்பட்டன. அந்த மூட்டைகளில் பிளாஸ்டிக் மணிகள் காணப்படவில்லை. இவற்றை அனுப்பிய இடத்தில் இந்தக் கலப்படம் தற்செயலாய் ஏற்பட்டிருக்கக் கூடும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : அவற்றிலே பிளாஸ்டிக் மணிகள் இருந்ததாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தக் கடைக்காரர்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? உணவுப் பிரச்சினை ஜீவாதாரமான பிரச்சினை. ஆகவே, உணவுப் பொருளில் கலப்படம் செய்பவர்களைத் தண்டிக்க இன்னும் கடுமையான முறைகளைக் கையாள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நான் அளித்த விடையிலே, "இவற்றை அனுப்பிய இடத்தில் இந்தக் கலப்படம் தற்செயலாக ஏற்பட்டு இருக்கலாம்" என்று சொன்னேன்.

திரு. சா. மெய்யப்பன் : பிளாஸ்டிக் மணிகளின் உற்பத்திச் செலவு தானிய உற்பத்திச் செலவைவிட அதிகமாக இருக்குமாகையால் அது கலப்படச் சட்டத்தின்கீழ் வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அங்கத்தினர் சொல்லுகிறபடி பிளாஸ்டிக் மணிகளைத் தயார் செய்கிற செலவு அதிகமாக இருக்கிற காரணத்தால், இது தற்செயலாக ஏற்பட்டிருக்கும் என்ற முடிவுக்கு அரசாங்கம் வந்திருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : இப்படி பிளாஸ்டிக் மணிகள் என்று மட்டுமல்லாமல், கல், மண் போன்றவற்றைக் கலப்படம் செய்கிறார்கள். கலப்படம் இல்லாத வஸ்துவே இல்லை என்ற நிலை